**கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் - 2018**

---

கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 5428-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவு மற்றும் 2016 யூலை 20 ஆந் திகதிய 5800-எல்கே ஆம் இலக்க மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி, நீர் விநியோக மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராகக் காணப்படுகின்றது. இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 34,912.48 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 257.08 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதில் ரூபா 27,507 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிப்புச் செய்யப்பட வேண்டமென உடன்பாடு காணப்பட்டது. மீதி ரூபா 7,405.48 மில்லியன் தொகை இலங்கை அரசினால் நிதியளிப்புச் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2021 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது செயற்திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் செயற்திட்டம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடு | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| ஆதனங்களின் கொள்வனவுக்கான இழப்பீடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செலுத்துகைகளில் செயற்திட்டத்தினால் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 13.5 மில்லியன் தொகையொன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டியவைகள் குறைத்துக் குறிப்பிடப் பட்டிருந்தமை | அமுல்படுத்தல் ஆதரவளிக்கும் செலவினங்கள் தவிர அட்டுறு அடிப்படையில் தொடர்ந்தும் பிரயோகிக்கப் பட்டுள்ளது. | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பிடிகாசு தொடர்பான செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்குக் கொண்டுவரப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிதி உடன்படிக்கையின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது கடன் வருமானங்களில் ரூபா 1.31 மில்லியன் தொகையான உள்ளூர் வரிகள் செலுத்தப்பட்டிருந்தது. | கடன் நிதி மிகைத்துக் குறிப்பிடப் பட்டிருந்தமை | இந்த ஆண்டில் அரச நிதிகளுக்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினை மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்ட நிதி உடன்படிக்கை மற்றும் வழிகாட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

பங்குபற்றும் கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாண பிராந்திய நகரங்களின் நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகள் செயற்திட்டத்தினால் அமுல்படுத்தப்படுவதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| மூலக்கூறு | செயற்பாடு | கணக்காய்வு விடயம் | தாக்கம் | தாமதங்களுக்கான காரணம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| கண்டி நகர பிராந்திய நகர்ப்புற இடையீடுகள் | கடுகஸ்தோட்டை - மடவல - திகன்ன வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றப் பிரிவு | வீதி புனரமைப்பிற்கான ஒப்பந்தம் ரூபா 1,614.96 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 10.77 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் அளிக்கப்பட்டிருந்ததுடன் 2016 யூலை 07 இல் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 392.73 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 2.62 மில்லியன் கிரயமொன்று ஏற்பட்ட பின்னர் 2017 செப்தெம்பர் 06 இல் கைவிடப்பட்டிருந்தது. ரூபா 242.24 மில்லியன் தொகையான நகர்வு முற்பணத்தின் மீதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவையாக தொடர்ந்தும் காணப்பட்டது. | ஒப்பந்தக் காலப்பகுதி நீடிப்புச் செய்யப்பட்ட வேண்டியுள்ளதுடன் அது செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பட்டியல் படுத்தப்பட்ட காலப் பகுதியினையும் தாக்கமளிக்கும். | ஒப்பந்ததாரரின் நிதி மற்றும் பௌதீக இயலளவுகளினை மதிப்பிடுவதற்கு தவறியமை. | பதிலளிக்கப்பட வில்லை. | ஒப்பந்ததாரரினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளினை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பில் திடமான மற்றும் வினைத்திறனான ஒப்பந்த முகாமைத்துவ முறைமை அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| | தர்மசோகா மாவத்தையின் புனரமைப்பு மற்றும் | வீதி நிர்மாண வேலைகள் 2016 யூலை 07 இல் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் | நிர்மாண வேலைகளினை பூர்த்தி செய்வதில் | ஒப்பந்ததாரர்களின் தவறுகள் மற்றும் பல்வேறு சமூக | பதலளிக்கப்பட வில்லை. | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேம்படுத்தல்கள் | உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியல் படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தத் திகதியில் 45 சதவீத மந்தமான செயன்முன்னேற்றத்தினைக் காட்டியிருந்தது. | தாமதத்திற்கான சாத்தியக்கூறுகள் காணப் படுகின்றமை. | பிரச்சினைகள் காணப்படுகின்றமை | | |
| மேதாலயின் புனரமைப்பு | கண்டி மேதாலயின் புனரமைப்பு தொடர்பான ஒப்பந்தம் 2017 யூலை 17 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்மென பட்டியல்படுத்தப் பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 68 சதவீத மந்தமான பௌதீக செயல் முன்னேற்றத்தினைக் காட்டியிருந்ததுடன் 2018 மே 31 இல் முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தினை முடிவுறுத்தும் நேரத்தில், அவற்றிற்கு ரூபா 133.75 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டிருந்தது. | மேலதிகக் கிரயங்கள் ஏற்படுத்துவதற்கு சாத்தியக்கூறு காணப் படுகின்றமை. | வேலைகளின் பரப்பெல்லையில் மாற்றம் மற்றும் முறையானதொரு மேற்பார்வையின் பற்றாக்குறை | 2018 மே 31 இல் ஒப்பநதம் முடிவுறுத்தப் பட்டிருந்ததுடன் தளம் 2018 யூலை 19 இல் ஒப்பந்த காரரினால் கையளிக்கப் பட்டிருந்தது. | - மேற்படி - |
| கண்டி நகரில் காணப்படும் நிலக்கீழ் வடிகாலமைப்பு முறைமையின் புனர்நிர்மாணம் | கண்டி நகரில் காணப்படும் நிலக்கீழ் சுரங்கப்பாதை வடிகாலமைப்பு புனரமைப்பு வேலைகள் 2018 ஏப்ரல் 25 இல் ரூபா 1,016 மில்லியன் மதிப்பிடப்பட்ட | ஒப்பந்தக் காலப்பகுதியினை நீடிப்புச் செய்வதற்கான சாத்தியக்கூறு காணப் | போதுமானளவு வேலைப் படையணியினர் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்ததாரர் ஆரம்ப கட்டத்தில் தேவைப்படுகின்ற முக்கிய ஆளணியினர் | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிரயமொன்றில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் 25 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. எவ்வாறாயினும், உள்ளபடியான பௌதீக செயல்முன்னேற்றம் 4 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. | படுகின்றமை. | | மற்றும் இயந்திரங்களினை அனுப்பியிருக்க வில்லை. | |
| கண்டி டொம்லின் பூங்காவினை மேம்படுத்தல் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 27 சதவீத பௌதீக செயல் முன்னேற்றங்களினை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட, அந்தத் திகதியில் உள்ளவாறு 10 சதவீத பௌதீக செயல் முன்னேற்றமொன்று மாத்திரம் அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | வடிவமைப்பு தவறுகள் காரணமாக | ஆலோசனையாளர் ஒப்பந்தாரர்க்கு மீளமைக்கப்பட்ட வடிவமைப்புக்கள் மற்றும் வரைபடங்களினை மீளச் சமர்ப்பிக்க வேண்டும். | - மேற்படி - |
| மாநகர கார் தரிப்பிட கூரையினை மேம்படுத்தல் | மேம்படுத்தல் வேலைகள் தொடர்பான பௌதீக செயல் முன்னேற்றம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயல் முன்னேற்றம் 47 சதவீதத்தினை அடைந்து கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த | வேலைகளினை பூர்த்தியாக்குவதில் தாமதத்திற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றதுடன் ஒப்பந்தாரரின் | கட்டிடத்தின் தரைத் தளத்தில் காணப்படும் கடைகளினை நகர்த்துவதிலுள்ள தாமதங்கள் | வேலைகளினை துரிதப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதங்களினைக் கண்டறியத் தேவையான உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | போதிலும் கூட அது 29 சதவீதமாகக் அறிக்கையிடப்பட்டது. | மேலதிக உரிமைக் கோரிக்கைகள் மீதான நட்டங்கள் | | | |
| காலி நகரப் பிராந்திய நகர தலையீடுகள் | காலி - பெத்தகம வீதியில் அமைந்துள்ள மொரகொட எலயிற்கு குறுக்கான கஹதுடுவ பாலத்தின் மீள் நிர்மாணம் | மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 54.5 மில்லியனில், ரூபா 22.4 மில்லியன் ஏற்பட்ட பின்னர், வேலைகளின் தாமதமான செயல் முன்னேற்றம் காரணமாக, பாலத்தின் மீள் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | மேலதிக கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு காணப் படுகின்றமை. | ஒப்பந்ததாரர்களின் வேலைகளின் மீது முறையான மேற்பார்வை யொன்றின் பற்றாக்குறை | பதிலளிக்கப்பட வில்லை. | மீதமாகவுள்ள வேலைகளினை பூர்த்தியாக்குவதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | மொரகொட எல பிரதான கால்வாய் மற்றும் கோயிலை குறுக்கறுக்கும் கடவையின் புனரமைப்பு | மொரகொட எல பிரதான கால்வாய் புனரமைப்பின் பௌதீக செயல் முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 65 சதவீதத்தை அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உள்ளபடியான செயல் முன்னேற்றம் அந்தத் திகதியில் உள்ளவாறு 19 சவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. | ஒப்பந்த காலப்பகுதியினை நீடிப்புச் செய்வதற்கு சாத்தியக் கூறு காணப் படுகின்றமை. | ஒப்பந்தகாரரின் தாழ்ந்த செயலாற்றல் மற்றும் நிர்மாண மேற்பார்வையின் பற்றாக்குறை | ஒப்பந்ததாரரின் தாழ்ந்த செயலாற்றல் காரணமாக, பௌதீக செயல் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை விட தாழ்ந்ததாகத் தொடர்ந்தும் காணப்பட்டது. | வினைத்திறனான வகையில் ஒப்பந்ததாரரின் செயற்பாடுகளினை மேற்பார்வை செய்ய வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கப்பட்ட ரூபா 1,237 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த நகர்வு முற்பணங்களில், ரூபா 161.50 மில்லியன் தொகையொன்று 03 வருடங்களுக்கும் அதிகமாக நிலுவையாக தொடர்ந்தும் காணப்பட்டது. ஒப்பந்ததாரர் மேலதிக நிதி உழைப்புக்களினை பெற்றுக் கொள்வதற்கு அனுமதித்திருந்ததுடன் செயற்திட்டம் முற்பணங்களினை அறவிடுவதற்கு போதுமான நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை. | பொது நிதியினை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு அல்லது மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | முடிவுறுத்தப்பட்ட ஒப்பந்தாரரிடமிருந்து ரூபா 161.5 மில்லியன் நகர்வு முற்பணம் அறவிடப்பட வேண்டி காணப்படுகின்றது. எவ்வாறாயினும், இந்த அனைத்து முற்பணங்களும் வங்கி உத்தரவாதத்தினூடாக அறவிடப்படும். | சாத்தியப்படக்கூடிய வகையில் விரைவாக முற்பணங்களினை தீர்ப்பனவு செய்வதற்கு ஒப்பந்ததாரர் கட்டாயப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆதர்ஸ்யின் இருக்கை பார்க்கும் மேசையின் (Arthar's Seat Viewing desk) புனரமைப்புக்கான ஒப்பந்தம் ரூபா 24.22 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியடைந்திருந்த போதிலும், வளாகத்தில் மின்னியல் உதிரிப்பாகங்கள் பொருத்துக்களாக இடத்திற்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டிருக்காமையினால் இனந்தெரியாத குழுவினால் அழிக்கப்பட்டிருந்தமை களப் பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டது. | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அக்கறையுடையோர் அடைந்து கொள்ள முடியாதுபோகும். | தொடர்புடைய மின்னியல் பொருத்துக்களினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைவிடத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ரூபா 1,333 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு பட்டியல்படுத்தப்பட்ட 26 உப செயற்திட்டங்கள் 2018 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் காலப்பகுதியினை நீடிப்புச் செய்வதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | சம்பந்தப்பட்ட உப செயற்திட்டங்கள் அதனைத் தொடர்ந்து அமுல்படுத்தப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டங்களினை பின்பற்ற வேண்டும். |
| (ஈ) | கண்டி பலபயன்முறை போக்குவரத்து முடியுமிடத்தின் நிர்மாண வேலைகள் மற்றும் காடாபே (Gatabe) நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் என்பன முறையே ரூபா 9,316.60 மில்லியன் மற்றும் ரூபா 899 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயங்களில் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நலன்களினை அக்கறையுடைய தரப்பினர்கள் அடைந்து கொள்ள முடியாது போகும். | வேலைகளினை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (உ) | யாழ்ப்பாண நகர அபிவிருத்தி நோக்கங்களின் ஆலோசனை சேவைகளுக்காக ரூபா 144 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தேவையான ஆலோசனை சேவைகளினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், யாழ்ப்பாண தீபகற்பத்தில் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி | - மேற்படி - | ஆலோசனை வடிவமைப்பு வேலைகள், வியாபரத் திட்டம் பூர்த்தியாக்கப்படும் வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பாடுகளின் ஒப்பந்த வசதியளித்தல் செயற்பாடுகளுக்காக ரூபா 5.8 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய செயற்பாடுகள்கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஊ) | 2017 ஏப்ரல் 27 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்ட காலியிலுள்ள நகர மேம்படுத்தல் கண்டுபிடிப்பின் இறுதி ஆலோசனை அறிக்கை, ரூபா 61.36 தொகையான முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும்கூட, மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், தொடர்புடைய ஆலோசனை சேவைகளின் பல்வேறுபட்ட பகுதிகளினை பூர்த்தியாக்குவதற்கு 11 ஏனைய ஆலோசனையாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆலோசனையாளர்களுக்கு ரூபா 15.81 மில்லியன் தொகையொன்று கூட செலுத்தப்பட்டிருந்தது. ஆலோசனை சேவைகளினை பூர்த்தியாக்குவதிலுள்ள தாமதங்களின் விளைவொன்றாக, காலியிலுள்ள நகர மேம்படுத்தல் கண்டுபிடிப்பின் ஒப்பந்தத்தின் கீழுள்ள வேலைகள் தொடர்ந்தும் மந்தமானதாகக் காணப்பட்டிருந்தது. | ஒப்பந்த காலப்பகுதி நீடிப்புச் செய்யப்படக் கூடியதாகக் காணப்படுகின்றதுடன் கிரயங்கள் வரம்பு மீறுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றமை. | இணங்குகின்றோம். | - மேற்படி - |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டினுடைய வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 278.67 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணம் கண்டி மற்றும் காலி மாகாண சபைகள் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளின் பயன்பாட்டிற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் சொத்துக்களினைப் பயன்படுத்தல் திட்டத்தின் பற்றாக்குறை காரணமாக பயன்படுத்தப்பட்டிராது குறித்த வளாகங்களில் தொடர்ந்தும் காணப்பட்டன. மேலும், ரூபா 120 மில்லியன் கிரயமொன்றில் 2016 இல் கொள்வனவு செய்யப்பட்ட குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வளாகத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் சேதங்கள் மற்றும் அனுமதியளிக்கப்படாத பயன்பாட்டிற்கு சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கண்டி மாநகர சபைக்கு விநியோகிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணம் அவர்களின் சுழற்சி வேலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. | நிதி முகாமைத்துவ முறைமையின் பகுதியாக திடமான சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கண்டி ஹீரஸ்கல மற்றும் தங்கல்லயிலுள்ள 300 குடும்பங்களுக்கு நீர் விநியோக வசதிகளினை வழங்குவதற்கு 03 நீர்த்தாங்கிகளின் நிர்மாண வேலைகள், குழாய்களினைப் பதித்தல் மற்றும் நீர் பம்பிகளினை | குறித்துரைக்கப்பட்ட நலன்களினை அக்கறையுடைய தரப்பினர்கள் பெற்றுக் கொள்ள முடியாது போகும். | நீர்ப்பொறி இல்லம் 2019 மே 02 இல் கண்டி மாநகர சபைக்கு கையளிக்கப் பட்டிருக்கின்றதுடன் தற்போது தொழிற்படுகின்றது. | தாமதத்திற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொருத்துதல் என்பன ரூபா 76.5 மில்லியன் கிரயமொன்றில் 2016 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீர் விநியோக வசதிகள் 2019 மே 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | கடனளிக்கும் முகவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 27,507 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் மொத்த ஒதுக்கீடுகளில் 18 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 5,638.31 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 36.28 மில்லியன் தொகையொன்று செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 4 ½ வருடங்கள் கடந்த பின்னர் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாண நகர அபிவிருத்தி செய்றதிட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 5.37 மில்லியன் மொத்த ஒதுக்கீடுகளில் காணிக் கொள்வனவு மற்றும் மீள்குடியமர்த்தல் நோக்கங்களுக்கான முறையான வேலைத் திட்டமொன்றின் பற்றாக்குறை காரணமாக, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 244.26 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1.40 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளினை பட்டியல்படுத்தப்பட்ட செயற்திட்ட காலப்பகுதியின் போது பூர்த்தி செய்ய முடியாது போகும். | நாட்டில் நிலவிய அரசியல் மாற்றங்கள் காரணமாக முதல் 2 ½ வருடங்களில் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் தொடர்ந்தும் மந்தமடைந்து காணப்பட்டது. | பட்டியல்படுத்தப்பட்ட காலப்பகுதியின் போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட நிதிகள் முழுமையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 194 உத்தியோகத்தர்களினை கொண்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களுக்கும் அதிகமாக காணப்பட்ட மேலதிக செயற்திட்ட பணிப்பாளர், பிரதி செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் உதவி செயற்திட்ட பணிப்பாளரின் 09 முக்கிய பதவிகளுக்கான உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக 71 உத்தியோகத்தர்களில் தொடர்ந்தும் காணப்பட்ட வெற்றிடங்களினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த பதவியணியினர் பற்றாக்குறை செயற்திட்டத்தின் செயற்பாடுகளினை அமுல்படுத்துவதிலுள்ள தாமதமாக செயன்முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ஐ.அ.டொலர் 79.94 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தினையுடைய 12 பெறுகை செயற்பாடுகளினை இரத்துச் செய்திருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது ஐ.அ.டொலர் 10.37 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றினையுடைய ஆலோசனை செயற்பாடுகள் தொடர்பான 21 ஒப்பந்தங்கள் கூட இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | அது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் மற்றும் வெளியீடுகளை தாக்கமளிக்கும். | தற்போது இடம்பெறுகின்ற கண்டி கழிவு நீர் செயற்திட்டம் காரணமாக, சில பெறுகை நடவடிக்கைகள் பதிலீடு செய்யப்பட்டிருக்கின்றதுடன், சில ஏனைய வேலைகளினை மேற்கொள்ள முடியாதிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் பின்தொடர் திட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 11 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு, செயற்திட்ட வேலைப் பட்டியலின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான விபரமான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், மீளாய்வாண்டிற்கான | செயற்திட்ட நிதி முகாமைத்துவம் மீதான பலவீனமான கட்டுப்பாடுகள் மற்றும் செயற்திட்ட காலப்பகுதிகூட நீடிப்புச் செய்யப்படக் | காலியில் அமுல்படுத்துவதற்கு பட்டியல்படுத்தப்பட்ட செயற்பாடுகள் கைவிடப்பட்டமை காரணமாக தொடர்புடைய சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. | செயற்திட்ட நடவடிக்கைகள் திறன்பட திட்டமிடப்பட்டு வடிவமைப்புச் செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட 5,100 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் ரூபா 2,746 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | கூடும். | | |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,939.46 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 18.80 மில்லியன் கட்டுநிதி மற்றும் 2018 சனவரி 01 இல் உள்ளவாறு தொடர்ந்தும் காணப்பட்ட ரூபா 647.35 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 4.23 மில்லியன் மீதி உள்ளடங்கலாக தொடர்புடைய கணக்கில் தொடர்ந்தும் காணப்பட்ட ரூபா 2,473.50 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 16.49 மில்லியன் கடன் மீதியில், இலங்கை மத்திய வங்கியில் பேணப்பட்ட விசேட (டொலர்) கணக்கிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 2,206.51 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 13.12 மில்லியன் மாத்திரம் மீளப் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையினால், செயற்திட்ட நடவடிக்கைகளின் மந்தமான செயல்முன்னேற்றம் மற்றும் நிதித் தேவைகளின் தாழ்ந்த எதிர்வு கூறல் காரணமாக, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கில் ரூபா 1,799.21 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.84 மில்லியன் மீதி பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றது. | கடனளிக்கும் முகவரினால் ஒதுக்கப்பட்ட நிதிகளின் பயன்படுத்துகை தொடர்பில் தாழ்ந்த திட்டமிடல் | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளினை அமுல்படுத்துவதிலுள்ள தாமதங்கள் காரணமாக ஒதுக்கப்பட்ட நிதிகளினை வினைத்திறனாக பயன்படுத்த முடியாதிருந்தது. | வினைத்திறனான வகையில் நிதிகளினைப் பயன்படுத்துவதற்கு முறையான பொறிமுறை ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

**3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகனங்களின் தொகுதி போக்குவரத்து உத்தியோகத்தரொருவரினால் மேற்பார்வை செய்யப்பட்டிராது செயற்படுத்தப்பட்டிருந்தமையால், செயற்திட்டத்தினால் வாடகைக்கமர்த்தப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்பாட்டில் காணப்பட்ட வினைத்திறன்கள் மற்றும் செயற்திட்டத்தின் பல்வேறுபட்ட பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்திருந்தமை தொடர்பில் கணக்காய்வில் மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. மோட்டார் வாகனங்களினை வாடகைக்கமர்த்துவது தொடர்பில் செயற்திட்டத்தினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் மாதமொன்றிற்கு 2500 கிலோமீற்றர் அதிஉச்ச எல்லை ஓடவேண்டுமென வேண்டப்படுகின்றதுடன் மிகை கிலோமீற்றர்களுக்காக மேலதிகக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். பல ஏனைய மோட்டார் வாகனங்கள் 94,177 கிலோமீற்றர் அதிஉச்ச எல்லைக்கு கீழே செயற்படுத்தப்பட்டிருந்த அதேவேளை மிகையாகக் காணப்பட்ட 118,283 கிலோமீற்றர் ஓட்டம் தொடர்பில் செயற்திட்டத்தினால் ரூபா 7.15 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்தினால் வாடகைக்கமர்த்தப்பட்ட மோட்டார் வாகனங்கள் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த மோட்டார் வாகனங்கள் போக்குவரத்து உத்தியோகத்தரொருவரின் மேற்பார்வையினைக் கொண்டிராது செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், வினைத்திறனான | மோட்டார் வாகனங்களினை தவறாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | நட்டங்கள் மற்றும் தவறான பயன்படுத்துகைகளினை இழிவளவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மோட்டார் வாகனத் தொகுதியின் வினைத்திறனான மற்றும் செயற்திறனான பயன்பாட்டினை உறுதிப்படுத்த வேண்டும். |

வகையில் மோட்டார் வாகனங்களின் பயன்படுத்துகையினை கணக்காய்வில் ஒழுங்குபடுத்த முடியாதிருந்தது.

**3.7 காணிகள் கொள்வனவு**

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| கொள்வனவு செய்யப்பட்ட காணி தொடர்பில் இழப்பீட்டின் மொத்தக் கிரய ரூபா 224.92 மில்லியன் தொகையில், ரூபா 77.37 மில்லியன் தொகையொன்று மாத்திரம் காணிக் கொள்வனவுகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நியதிச்சட்ட செலுத்துகைகளாக செலுத்தப்பட்டிருந்தது. மீதி ரூபா 147.55 மில்லியன் தொகை காணிக் கொள்வனவு மீள்குடியேற்ற குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்துகைகள் தொடர்பில் ஊழல் மற்றும் மோசடிகளுக்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | சட்ட கட்டமைப்பின் அடிப்படையில் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் இணங்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு கொள்கைகளினை கருத்திற் கொண்டு காணிக் கொள்வனவுகளினால் பாதிப்படைந்த நபர்களுக்கான இழப்பீடுகள் செலுத்தப்பட்டுள்ளன. | செலுத்துகைகளின் நியாயத் தன்மையினை நியாயப்படுத்தும் பொருட்டு மேலதிக செலுத்துகைகள் தொடர்பான பதிவேடுகள் பேணப்படவேண்டும். |